**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 36/2018**

திரு.தர்மராஜ் (P.W –1) **17.09.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்ன படித்துள்ளேன் என்றால் பட்டப்படிப்பு படித்துள்ளேன். என்ன தொழில் செய்கிறேன் என்றால் பள்ளி நடத்தி வருகிறேன். தாவா சொத்தில் தான் நான் வசித்து வருகிறேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ–2 மற்றும் 3 ஆவணங்களில் சொத்து விவரத்தில் கிழமேல் அடி அளவுகள் 95 அடி என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. பத்திரத்தில் அவ்வாறு உள்ளது. தாவா சொத்து விவரத்தில் தாவா சொத்து 102 அடி என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. பட்டாபடி அவ்வாறு சொல்லி உள்ளேன்.

2. என்னுடைய கிரைய ஆவணத்தில் முனுசாமி சொத்துக்கு கிழக்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. 7 அடி சந்து நடுவில் உள்ளது. அவ்வாறு 7 அடி சந்து என்று கிரைய ஆவணங்களில் எதிலும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. கருப்பம்மாள் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணத்திற்கு முன்பு என்னுடைய சொத்தைப் பொறுத்து ஏற்பட்ட கிரையா ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அதனால் தாவா சொத்திற்கு மேற்கு புறம் 7 அடி உள்ளதாக பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு.

3. வாதி உடைய வீடு அவருடைய தகப்பனார் காலத்திலே தாவா சொத்தில் கட்டப்பட்ட வீடு என்றால் சரி. அதன் பிறகு இடித்து கட்டப்பட்டுள்ளது. தாவா

சொத்து மாநகராட்சி எல்லைக்குள் வருவதால் கட்டடங்களை கட்டுவதற்கு முறையாக அனுமதி பெறாமல் கட்ட முடியாது என்றால் அனுமதி பெறவில்லை. அந்த கட்டடங்கள் கட்டிய சமயத்தில் அம்மாதிரி நடவடிக்கைகள் இல்லாமல் இருந்து வந்தது. வாதி தாவா சொத்தில் இருந்த வீட்டை இடித்துவிட்டு எந்த வருடம் புதிதாக வீடு கட்டினார் என்றால் 2010 ஆம் வருடத்தில் கட்டினார். அந்த சமயத்தில் முறையாக அனுமதி பெறப்பட்டதா என்றால் இல்லை.

4. அனுமதி பெறாமல் கட்டிடங்கள் 2010 ஆம் வருடம் தாவா சொத்தில் கட்ட முடியாது. அவ்வாறு அனுமதி பெறும் போது தென் புறம் சுவர் இருப்பதாக சொல்லி அனுமதி பெற்று விட்டு தற்போது அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள EB meter பொருத்தப்பட்டுள்ள இடம் பிரதிவாதி உடைய சுவர் என்றால் சரி. பிரதிவாதியின் அனுமதியின் பெயரில் அங்கு EB meter வைத்துள்ளேன் என்றால் சரி. புகைப்படத்தில் வெள்ளை நிறத்தால் கட்டப்பட்டுள்ள சுற்றுப்புற சுவர் யாருடையது என்றால் என்னுடைய சுவர். அந்த சுவரை ஒட்டியவாறு மேலுள்ள வெள்ளை நிறமிட்டசுவர் யாருடையது என்றால் என்னுடைய சுவர்.

5. எந்த வீட்டிற்கும் இரண்டு சுற்றுப்புற சுவர் வைக்க மாட்டார்கள் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் கட்டி உள்ள வீட்டிற்கு இடம் விட்டு தான் சுற்றுப்புறச் சுவர் கட்டி உள்ளேன் என்றால் ஆமாம். 2வது புகைப்படத்தில் உள்ள பெரிய சுவருக்கும் சிறிய சுவருக்கும் இடையில் எந்த இடைவெளியும் இல்லை என்றால் சரி. புகைப்படத்தில் உள்ள செப்டிக் டேங்க் பைப் பிரதிவாதி உடையது என்றால் சரி. அது என்னிடத்தில் உள்ளது. அந்தப் பைப்

பிரதிவாதி சொத்தில் வடமேற்கு மூலையில் உள்ளது என்றால் ஆமாம். அது என்னுடைய சொத்தில் உள்ளது.

6. பிரதிவாதி அவருடைய சொத்தில் புதிய வீடு கட்டிய போது 3 வது புகைப்படத்தில் உள்ள பழைய கடைசியாக உள்ள ஓட்டு வீட்டை இடிக்காமல் அப்படியே வைத்துள்ளார் என்றால் சரி. புகைப்படத்தில் அந்த வீடு சுற்றுப்புற சுவரில் கடைசி வரை கட்டப்பட்டுள்ளது என்றால் தவறு. தாவா சுத்து 1960 ஆம் வருடமே நகராட்சி எல்லைக்குள் வருவதால் டவுன் சர்வே எண் எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ –2 மற்றும் 3 ல் ஏற்படும்போது டவுன் சர்வே எண் விவரங்கள் குறிப்பிட்ட தான் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரி.

7. வாதியின் தகப்பனார் கிரையம் பெற்ற பிறகு பட்டா அவர் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரி. அந்த பட்டாவை தாவாவில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. பட்டாவை தாக்கல் செய்தால் கிழமேல் அடி 41 என்பது தெரிந்து விடும் என்பதால் அதை மறைக்கிறேன் என்றால் தவறு. முத்துசாமி வாதியின் தகப்பனார் சொத்துக்களை கிரையம் பெறும்போது அளவுகள் தவறாக கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. ஜம்புலிங்கம் அவர் கிரயம் பெற்ற சொத்துக்களில் 1974 ம் ஆண்டு முறையாக அனுமதி பெற்று கட்டடங்களை கட்டி உள்ளார் என்றால் தவறு. முறையான அனுமதி பெற்று தான் அவர் கட்டடங்களை கட்டி சுற்றுப்புற சுவர் ஏற்படுத்தினார் நான் வழக்குக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

8. ஜம்புலிங்கம் கட்டடங்கள் அவருடைய சொத்தில் கட்டிய பிறகு பிரதிவாதிகள் ஜம்புலிங்கத்திடம் இருந்து சொத்துக்களை கிரையம் பெற்ற வரை எந்த பிரச்சனையும் இல்லை என்றால் ஆமாம். பிரதிவாதிகள் வட மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரி. பிரதிவாதி வட மாநிலத்தவர்கள்

என்பதால் அவர்கள் கிரயம் பெற்ற சொத்தை அபகரிக்க வேண்டி 2017 ஆம் வருடத்திற்கு பிறகு பிரச்சனை ஏற்படுத்தி பொய் வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் தவறு.

9. தாவா சொத்தைப் பொறுத்து ஏற்பட்ட பட்டா தவறாக உள்ளது என்பதை பொறுத்து என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்றால் மாநகராட்சியில் மனு கொடுத்து நடவடிக்கை எடுத்துள்ளேன். அதன் விவரங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. வாதியின் தகப்பனார் இறந்த பிறகு தாவா சொத்தில் கட்டப்பட்டுள்ள வீட்டு வரி வாதியின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரி. அவர் தான் ஒரே வாரிசு. இன்று வரை பட்டா வாதி பெயரில் மாற்றம் செய்யாமல் முத்துச்சாமி பெயரில் உள்ளது என்றால் .சரி தேவையில்லை என்பதால் மாற்றாமல் உள்ளோம்.

10. கிழ மேல் அளவுகள் முத்துசாமி பெயரில் உள்ள பட்டாவில் தவறாக உள்ளதால் தான் அதை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்காமல் உள்ளோம் என்றால் தவறு. தாவா சொத்துக்களை பொறுத்து வாதிக்கு உரிய வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை நீதிமன்ற ஆணையாளர் அளவீடு செய்த சமயத்தில் இரு சொத்துக்களில் அடையாளம் காண்பதற்கு சரியான அடையாளக் குறிப்புகள் இல்லை என்றால் சரி. அது வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் தெரியும் என்றால் ஆமாம். தாவா சொத்தை இதுவரை நீதிமன்ற ஆணையாளர் நான்கு முறை பார்வையிட்டு அளவீடுகளை மேற்கொண்டு உள்ளார் என்றால் சரி. நீதிமன்ற ஆணையாளர் கடைசியாக தாவா சொத்தை பார்வையிட்டு 2024 ஆம் வருடம் அளவீடுகளை மேற்கொண்டார் என்றால் சரி. அந்த சமயத்தில் வாதி பிரதிவாதிகள் பங்கு பெற்றார்கள் என்றால் ஆமாம்.

11. வாதியின் சொத்துக்கு வடக்கு புறம் இரண்டு வீடுகள் உள்ளது என்றால் சரி. இரண்டு வீடுகளை தாண்டி ஒரு ரோடு உள்ளது என்றால் சரி. தாவா சொத்திற்கு தென் புறம் 20 முதல் 25 வீடுகள் உள்ளது என்றால் சரி. அதன் பிறகு நொய்யல் ஆறு பூமியில் உள்ளது என்றால் தவறு. அதன் பிறகு காலியிடம் உள்ளது. அதன் பிறகு தான் நொய்யல் ஆறு கடைசியாக நீதிமன்ற ஆணையாளர் அளவீடுகளை மேற்கொண்ட போது வடபுறம் மற்றும் தென் புறம் இரு புறத்திலிருந்தும் அளவுகளை மேற்கொண்டார் என்றால் சரி. அந்த அளவீடுகளில் அடிப்படையில் நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை தாக்கல் செய்து உள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

12. முதல் விசாரணை வாக்குமூலத்தில் 2010 ஆம் வருடம் வீடு கட்டிய போது தென்புறம் சுற்றுபுற சுவர் கட்டி அதற்கு பிறகு 4 ½ அடி விட்டு பூச்செடிகள் வைத்ததாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக சுற்றுப்புற சுவர் கட்டிய பிறகு அதைத் தாண்டி காலியிடம் விட மாட்டார்கள் என்றால் தவறு. நான் வாஸ்து பார்த்து கட்டி உள்ளேன். பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டி வாஸ்து பார்த்து கட்டியதாக தற்சமயம் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

13. 2015 வருடம் மே மாதம் பிரதிவாதிகள் உடைய முன் பாத்தியஸ்தார்கள் அவர்களுடைய செப்டி டேங்க் மற்றும் மின் இணைப்பை வைப்பதற்காக

என்னிடம் அனுமதி பெற்று அனுபவம் செய்து வருவதாக சொல்வதே பொய் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் என்னுடைய உரிமையாவணங்களை பார்த்து பிரதிவாதிகள் சொத்தை திருப்பித் தருவதாக சொன்னார்கள் என்று சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சொத்துக்களை அபகரிக்க வேண்டி பொய் சங்கதிகளை சொல்லி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.09.17 18:27:12 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.